## கிழக்கு மாகாண சபை - 2019

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

கிழக்கு மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொழிப்பறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவு மற்றும் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிழக்கு மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான

கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்கிய பல்வேறு மாகாண நிறுவனங்களின் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கிழக்கு மாகாண சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு

காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக முகாமையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபைக்கு எதிராக மூன்றாம் தரப்பினர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 47 நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண சபை தற்போது காசு அடிப்படையிலான கணக்கீட்டு முறைமையை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்களை தயாரித்திருந்தது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு எங்களால் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. வருமான நிர்வாகம்

### 2.1 கிழக்கு மாகாணத்தில் முத்திரைத் தீர்வையை விதிக்கும் நோக்கத்திற்காக அசையாத ஆதனங்களை மதிப்பீடு செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஆதனங்களின் குறைவான பெறுமதியை வெளிப்படுத்தியதற்காக ஆதனத்தின் பெறுமதி தொடர்பாக ரூபா 42,136,021 கூட்டுமொத்தமான மேலதிக முத்திரைத் தீர்வையை மாகாண இறைவரித் திணைக்களம் அறவீடு செய்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி திணைக்களத்தின் மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பீட்டின் பிரகாரம் காணி பதிவகத்தில் ஆதனத்தின் முகப்பெறுமதியை மாற்றுவதற்கு திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் காணி பதிவகத்தின் பதிவாளரிற்கு திணைக்களம் அறிவித்திருக்கவில்லை. இதன் விளைவாக மதிப்பிடப்பட்ட ஆதனத்தின் பழைய பெறுமதி காணி பதிவகத்தில் பல ஆண்டுகளாக மாற்றப்படாமல் காணப்பட்டிருந்தது. | மேற்படி மாற்றங்களை காணி பதிவகத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இறைவரித் திணைக்களம் உறுதிப் பெறுமதியின் மேலதிக முத்திரைத் தீர்வை மற்றும் தண்டப்பணத்தை சேகரித்திருந்ததுடன் அதன் விபரங்கள் அனைத்து மாவட்ட காணி பதிவாளர்களிற்கும் அறிவிக்கப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப் பதிவகத்தில் காணிகளிலிருந்தான முத்திரைத் தீர்வையை சேகரிப்பது தொடர்பாக மாகாண இறைவரித் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 மே 31 வரை நடாத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் பிரகாரம் முத்திரைத் தீர்வையாக குறைந்த தொகையை செலுத்தும் பொருட்டு காணி உரிமையாளர்கள் அவர்களது காணிகளிற்காக குறைந்த பெறுமதியை வெளிப்படுத்தியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் அவ்வாறு குறைத்து பெறுமதியிடப்பட்ட ஆதனங்களிற்காக ரூபா 11,227,019 கூட்டுமொத்தமான தண்டப்பணத்துடனான மேலதிக முத்திரைக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. எனினும் மாகாண இறைவரித் திணைக்களம் உரிய நேரத்தில் மாகாண இறைவரி ஆணையாளரை நியமிக்காததன் காரணமாக காணி உரிமையாளர்களிற்கு விதிக்கப்பட்ட மேலதிக முத்திரைத் தீர்வைகளை அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு 2020 யூன் 30 வரையிலும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | செலுத்தப்படாத முத்திரைத் தீர்வையை அறவீடு செய்வதற்கு மாகாண இறைவரி ஆணையாளரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்தப்படாத வரி சேகரிப்பு தொடர்ச்சியான செயன்முறையொன்றாக காணப்படுகின்றதுடன் செலுத்தப்படாத வரியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை செயன்முறையில் உள்ளது. |

## 2.2 முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களை சேகரித்தல் தொடர்பான செயன்முன்னேற்றம்

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப் பதிவகத்தில் காணிகளை பதிவு செய்வதிலிருந்து முத்திரைத் தீர்வையை சேகரிப்பது தொடர்பாக மாகாண இறைவரித் திணைக்களத்தால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் பிரகாரம் 794 காணி உரிமையாளர்கள் முத்திரைத் தீர்வையாக குறைந்த தொகையை செலுத்தும் பொருட்டு அவர்களது காணிகளிற்காக குறைந்த பெறுமதியை வெளிப்படுத்தியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் அவ்வாறு குறைவாக பெறுமதியிடப்பட்ட ஆதனங்களிற்காக ரூபா 14,190,769 கூட்டுமொத்தமான மேலதிக முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் காணி உரிமையாளர்களிற்கு விதிக்கப்பட்ட ரூபா 535,450 நிலுவையாகவுள்ள முத்திரைத் தீர்வையை அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு 2019 திசெம்பர் 31 வரையிலும் மாகாண இறைவரித் | முத்திரைத் தீர்வையை அறவீடு செய்வதற்கு மாகாண இறைவரி ஆணையாளரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண இறைவரி ஆணையாளரின் பதவி தற்போதும் வெற்றிடமாக இருப்பதன் காரணமாக திணைக்களத்தால் அறவிடப்பட வேண்டிய மேலதிக முத்திரைத் தீர்வைகளின் பிரச்சினைகள் தொடர்பாக எந்தவொரு சட்ட நடவடிக்கையையும் எடுப்பதற்கான நிலையொன்றில் திணைக்களம் காணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2012 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஆறாயிரத்து இருபத்தாறு (6,026) உறுதிகள் காணிகள் குறைவாகப் பெறுமதியிடப்பட்டதன் காரணமாக மேலதிக முத்திரைத் தீர்வையை சரிபார்த்து விதிப்பதற்காக மாகாண இறைவரித் திணைக்களத்தால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உறுதிகள் தொடர்பான மதிப்பீட்டு வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மனித வளங்கள் போதாமை திணைக்களம் எதிர்நோக்கிய மிகப்பெரிய தடையாக உள்ளதுடன் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகங்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து குறைவாக பெறுமதியிடப்பட்ட உறுதிகளை மதிப்பீடு செய்வது மூடப்பட்டிருந்தன. ஆகையால் மதிப்பீட்டுச் செயன்முறை நடமாடும் சேவை மூலம் மேற்கொள்ளப்பட்டது. |

## 2.3 வருமான நிலுவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 333,065,744 கூட்டுமொத்தமான 09 பிரதேச செயலகங்களுடன் தொடர்புடைய அரசாங்க காணிகளுக்கான குத்தகை வருமானம் 1991 ஆம் ஆண்டிலிருந்து நிலுவைகளாக காணப்பட்டிருந்தன. எனினும் 2020 யூன் 30 வரையிலும் அந் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் தாமதமின்றி குத்தகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 333,065,744 தொகையான இத் திரண்ட நிலுவைகள் முன்கொண்டுவரப்பட்ட மீதி தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்ட தண்டப்பணத் தொகையை உள்ளடக்குகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஸ்தாபிப்பின் பின்னர் 11 ஆண்டுகள் ஆகியிருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற தங்கநகை அடகு நிலையங்களை பதிவுசெய்து அது தொடர்பாக வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கும் பொருட்டு சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு தொகை மாகாண சபைக்கு நட்டமாகக் காணப்பட்டது. | தங்கநகை அடகு நிலையங்களிற்கான மாகாண சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தங்கநகை அடகு தரகுத் தொழிலிற்கான சட்டமூலமொன்று மூன்று மொழிகளிலும் வரையப்பட்டுள்ளதுடன் ஆரம்பித்த பின்னர் சபைக்கு சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,152,988,235 மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் ஒப்பிடும்போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,708,421,018 ஆகக் காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 555,432,783 வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் கூலிகள் ரூபா 1,429,917,032 தொகையால் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4. நியதிச்சட்டக் கணக்குகள்

### 4.1 கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு | ஆதனத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு | எங்களது அதிகாரசபைக்கு கட்டிடத்தை கையளிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வசதியளிக்கும் பொருட்டு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 2,405,942 கிரயத்தில் கல்முனையில் பஸ் நிலையத்திற்காக கல்முனை மாநகர சபையால் ஒதுக்கப்பட்ட காணியொன்றில் கட்டிடம் ஒன்றை கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நிர்மாணித்திருந்த போதிலும் கட்டிடத்தின் உரிமைத்துவத்தை கல்முனை மாநகர சபை கோரியிருக்காததுடன் தனியார் வங்கியொன்றுக்கு அதனை வாடகைக்கு கொடுத்திருந்தனர். இதன் விளைவாக அதிகாரசபை இக் கட்டிடத்தை பயன்படுத்தியிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல்முனை மாநகர சபையிடமிருந்து பல தடவைகள் நாங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தோம். எதிர்பாராத விதமாக எமது அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு அவர்கள் தற்போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | பஸ் தரிப்பிடத்திற்கு தனியார் பஸ்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்யும் பொருட்டு ரூபா 1,142,000 கிரயத்தில் 2015 யூன் 08 ஆம் திகதி General Packet Radio Services (GPRS) உடன் இணைக்கப்பட்ட 13 விற்பனை தளங்கள் (POS) மற்றும் 2,000 பயணச்சீட்டு சுருள்களை கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை கொள்வனவு செய்திருந்த போதிலும் செயற்படுத்துவதற்கு முறையான மென்பொருள் முறைமை காணப்படாததன் காரணமாக | மேலும் தாமதமின்றி விற்பனை தளங்களை செயற்படுத்துவதற்கு மென்பொருள் முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது முறைமையானது பரீட்சிப்புக் காலப்பகுதியின் கீழ் செயற்படுகின்றது. பரீட்சிப்பு காலப்பகுதி முடிவடைந்த பின்னர் மென்பொருள் முறையாக செயற்பட்டால் அனைத்து மூன்று மாவட்டங்களிலும் இந்த 13 POS இயந்திரங்களை நாங்கள் செயற்படுத்த முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய நோக்கங்களுக்கு 05 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | அம்பாறை, அக்கறைப்பற்று தொடக்கம் திருகோணமலை வரை 13 குளிரூட்டப்பட்ட பஸ்களிற்கான வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த 13 பஸ்களில் 09 பஸ்களிற்கு மாத்திரம் அதிகாரசபையால் நேர அட்டவணைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. 06 பஸ்கள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது பொதுமக்களிற்கு போக்குவரத்து சேவைகளை வழங்கியிருந்தன. | வழி அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு இணங்க பஸ்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அம்பாறை, அக்கறைப்பற்று தொடக்கம் திருகோணமலை வரை 13 குளிரூட்டப்பட்ட பஸ்களிற்கான நேர அட்டவணைகளை அதிகாரசபை வழங்கியிருந்தமை உண்மையானதாகும். எனினும் குளிரூட்டப்பட்ட பஸ்களின் சில வழி அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் மீளாய்வாண்டின் போது பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. |
| (ஈ) | ரூபா 1,000,000 கிரயத்தில் ISO 9001:2015 தரநியமத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்திறனான தர முகாமைத்துவ முறைமையொன்றினை நிறுவுவதற்கு 2016 செப்தெம்பர் 16 இல் தனியார் கம்பனியொன்றுடன் அதிகாரசபை உடன்படிக்கை ஒன்றைச் செய்திருந்தது. இதில் 2019 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 326,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2020 யூன் 30 வரையிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு ISO சான்றுபடுத்தலை அதிகாரசபை | மேலதிக தாமதங்களின்றி உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை நியமங்கள் நிறுவனம் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டிருந்ததுடன் முதலாவது கணக்காய்விற்காக அதிகாரசபைக்கு வருகைதரவுள்ளோம் என அதிகாரசபைக்கு அறிவித்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றிருக்கவில்லை. இதன் விளைவாக செயற்திட்டம் மீது செலவிடப்பட்ட பணம் பயனற்றதாகியிருந்தது. | | |

## 4.2 கிழக்கு மாகாணத்தின் மாகாண வீடமைப்பு அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரினால் வழங்கப்பட்ட 2014 யூன் 20 ஆம் திகதிய ஜீ/ஈபிசீ/பீ/14/ஆர்/எச்.ஏ ஆம் இலகக் கடிதத்தின் பிரகாரம் மாகாண வீடமைப்பு அதிகாரசபையானது திரட்டு நிதியத்தில் தங்கியிருக்காது அதனது சொந்த நிதிகளை உருவாக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது நிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அதனை ஸ்தாபித்ததிலிருந்து 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் செலவினத்தை எதிர்கொள்வதற்கு அதனது சொந்த நிதிகளை உருவாக்கும் பொருட்டு எந்தவொரு வணிக நடவடிக்கையையும் அதிகாரசபை ஆரம்பித்திருக்கவில்லை. | அதனது சொந்த நிதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வணிகத்தில் முதலீடு செய்வதற்கு மூலதனம் போதாமை காரணமாக இவ் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்த போதிலும் முன்மொழியப்பட்ட இவ் விற்பனை நிலையங்கள் தற்போது வரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மனித வள சக்தி போதாமை காரணமாக அச் செயற்பாட்டில் ஈடுபடும் நிலையொன்றில் அதிகாரசபை காணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2013 இன் 2 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை சட்டத்தின் 1(I) ஆம் பகுதியின் 03(3) ஆம் பிரிவின் பிரகாரம் நபரொருவர் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக காணப்பட்டால் அவர் அதிகாரசபையின் தலைவர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு தகைமை அற்றவராவார். எனினும் அக்காலப்பகுதியின் போது ஏறாவூர் நகரசபை உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு சபைக் கூட்டங்களில் பங்குபற்றிய நபரொருவர் மேற்படி சட்டமூலத்திற்கு முரணாக 2019 சனவரி 30 இல் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருந்தார். | சட்டமூலத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரால் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை சட்டமூலத்திற்கு முரணாக இந்நியமனம் காணப்பட்டதென்பதை விளங்கப்படுத்தி பிரதான அமைச்சின் செயலாளர் ஊடாக கௌரவ ஆளுநருக்கு அதிகாரசபை முறையாக அறிவித்திருந்தது. |
| (இ) | மாகாண வீடமைப்பு அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (2015-2019) பிரகாரம் 2015 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளின் போது ரூபா 14,525 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு 29,700 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடமைப்பு | அதனது சொந்த நிதிகளை உருவாக்குவதன் மூலம் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை (ஈபிஎச்ஏ) திட்டத்தை தயாரித்து அங்கீகாரத்திற்காக மாகாண திட்டமிடல் செயலகத்தின் ஊடாக நிதி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்திருந்தது. பிஎஸ்டிஜீ இன் கீழ் ரூபா 48.61 மில்லியன் கட்டுநிதியை மாத்திரமே ஈபிஎச்ஏ பெற்றிருந்ததுடன் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான உதவியாக நிதியேற்பாடு ரூபா 48.43 |

| | | | |
|---|---|---|---|
| | உதவி வழங்கப்படுகின்றமை தவிர இக் காலப்பகுதியின் போது எந்தவொரு வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | | மில்லியன் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. கட்டுநிதி முழுமையாக வழங்கப்பட்டிருந்தால் அதிகாரசபையானது அதிக நிர்மாணங்களை மேற்கொண்டிருக்கும். |
| (ஈ) | அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் 2014/03/03 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுகின்ற ஒப்பந்ததாரரிற்கு சீமெந்தை விநியோகிப்பதற்காக டோக்கியோ சீமெந்துக் கம்பனியிடமிருந்து சீமெந்தை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி தீர்மானத்திற்கு முரணாக அதிகாரசபை மேற்படி கம்பனியிடமிருந்து சீமெந்தை கொள்வனவு செய்து இலாபத்தை உழைக்கும் பொருட்டு உப முகவர்களிற்கு அவற்றை விற்பனை செய்திருந்தது. ஆகையால் கம்பனி அதிகாரசபைக்கு சீமெந்தை வழங்குவதை நிறுத்தியிருந்தது. இதன் விளைவாக அதிகாரசபை மாகாணத்தினுள் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களிற்கு சீமெந்தை வழங்க முடியாதிருந்தது. | அதிகாரசபை தானாகவே நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஈபிளச்ஏ மூன்று மாவட்டங்களில் அமுல்ப்படுத்தப்பட்ட அதன் வீடமைப்புச் செய்றதிட்டங்களிற்காக டோக்கியோ சீமெந்துக் கம்பனி ஊடாக ஒப்பந்ததாரர்களிற்கு தேவையான சீமெந்தை வழங்கியிருந்தது. பின்னர் டோக்கியோ சீமெந்துக் கம்பனி ஈபிளச்ஏ ஆல் நேரடியாக அமுல்ப்படுத்தப்பட்ட வேலைகளிற்கு சீமெந்துகளை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. ஒப்பந்ததாரர்களிற்கல்ல. சீமெந்து விநியோகத்தை நிறுத்துவதற்கு டோக்கியோ சீமெந்துக் கம்பனிக்கு வழிவகுத்த காரணம் இதுவேயாகும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் 2014/03/05 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையால் பொறுப்பேற்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்கான கட்டுமானக் கற்களை (Cement Bricks) உற்பத்தி செய்வதற்காக மாகாணத்தினுள் 10 உற்பத்தி நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 1,200,000 கட்டுமானக் கற்களை உற்பத்தி செய்வதன் மூலம் ஆண்டிற்கு ரூபா 4,322,510 இலாபமொன்றை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் 2019 திசெம்பர் 31 வரையிலும் இச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உற்பத்தி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அத்தகைய அலகுகளை ஸ்தாபிப்பதற்கு ஆரம்ப மூலதனம் தேவைப்படுவதன் காரணமாக இதனை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் மாகாண சபையால் கட்டுமானக் கற்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.3 கிழக்கு மாகாண முன்பள்ளி பாடசாலை கல்விப் பணியகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| யுனிசெப் ஒத்துழைப்புடன் மாகாண கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட கொள்கை வழிகாட்டலின் பிரகாரம் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களிற்கான ஆகக்குறைந்த நியமங்களாக முன்பள்ளி பாடசாலை கல்வியில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா கற்கைநெறி ஒன்றை கட்டாயமாக பூர்த்தி செய்திருக்க வேண்டிய போதிலும் 1,515 முன்பள்ளி | டிப்ளோமா கற்கைநெறிகளை பூர்த்திசெய்வதற்கு ஆசிரியர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்திசெய்திருக்க வேண்டுமென சட்டமூலத்தில் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் ஆசிரியர்களிற்கு டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்வதற்கு நிதி தேவைப்பாடு தடையொன்றாகக் காணப்படுகின்றதுடன் பல்கலைக்கழகங்களில் இதன் |

| | | |
|---|---|---|
| பாடசாலை ஆசிரியர்கள் 2020 யூன் 30 வரையிலும் டிப்ளோமா கற்கைநெறிகளை பூர்த்திசெய்திருக்கவில்லை. | | கிரயம் ஏறத்தாழ ரூபா 75,000.00 ஆக இருப்பதால் அவர்களது கற்கைக்கான நிதியைப் பெறுவதில் ஆசிரியர்கள் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். |

## 4.4 கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 இன் 01 ஆம் இலக்க கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியக சட்டமூலத்தின் 11(அ) பிரிவின் பிரகாரம் நபரெருவர் உள்ளூராட்சி அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அவர் பணியகத்தின் தலைவர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு தகைமை அற்றவராவார். எனினும் அக் காலப்பகுதியின் போது அம்பாறை நகர சபை உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு சபைக் கூட்டங்களில் பங்குபற்றியிருந்த நபரொருவர் மேற்படி சட்டமூலத்திற்கு முரணாக 2019 ஜனவரி 30 இல் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஒருவராக நியமனம் செய்யப்பட்டிருந்தார். | சட்டமூலத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணியகத்தின் தலைவரை நியமனம் செய்வதற்காக கௌரவ ஆளுநரால் வழங்கப்பட்ட நியமனத்தின் பிரகாரம் ஈபிரீபீ இது தொடர்பாக எழுத்துமூலம் அறிவித்திருந்தது. |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2008 ஏப்ரல் 21 ஆம் திகதிய 2008/12 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் இரு மொழி மூலம் (Bi-medium) கற்கின்ற மாணவர்களுக்காக தனியான வகுப்புபொன்று இருக்கக்கூடாததுடன் அவர்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமான மாணவர்களுடன் கலந்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் ஆங்கிலத்தில் உரிய பாடத்தை கற்கும் போது அவர்கள் பிரிக்கப்பட வேண்டும். எனினும் மேற்படி சுற்றிக்கைக்கு முரணாக இரு மொழி மூலமான கல்விக்காக கிண்ணியா கல்வி வலயத்தில் 06 பாடசாலைகளில் 20 தனிப்பட்ட வகுப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக இரு மொழி மூலமான கல்வி இணைப்பாளர் வகுப்புக்களை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | 2008/12 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2008/12 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது இரு மொழி மூலமான கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பார்க ஆகக்கூடிய கவனம் எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் - அபிவிருத்தி உரிய பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்கின்றார் என்பதும் இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) கல்முனை கல்வி வலயத்திலுள்ள 17 பாடசாலைகள் பாடசாலைகளின் தரநிலையை பேணுவதற்காகவும் மாகாண தரப்படுத்தலுக்காகவும் க.பொ.த. (சாதாரண) தர பரீட்சைக்கு தோற்றுவதற்கு திறமையாக செயற்பட்டிருக்காத மாணவர்களை அனுமதித்திருக்கவில்லை. இதன் விளைவாக மாணவர்கள் எந்தவொரு கல்வித் தகைமையுமின்றி பாடசாலைகளை விட்டு விலக வேண்டியிருந்ததுடன் இந்நடைமுறை குறித்த மாணவர்களின் உயர் கல்வியை மோசமாக பாதிக்கும். | அனுமதிகளை மறுக்காமல் பரீட்சைகளில் தோற்றுவதற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளரின் பிரகாரம் பாடசாலைகளுக்கு நீண்டகாலம் சமூகமளித்திருக்காதமை, சில மாணவர்கள் முன்கூட்டியே திருமணம் செய்திருந்தமை மற்றும் சில மாணவர்கள் பரீட்சையிலிருந்து அவர்களாகவே மீளப்பெற்றிருந்தமை ஆகியவற்றால் இந்த 17 பாடசாலைகளின் அதிபர்கள் 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (சாதாரண) தரத்திற்கு தோற்றுவதற்கு சில மாணவர்களை அனுமதித்திருக்கவில்லை. |

## 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தனியார் கம்பனியொன்றால் 2016 யூன் மாதத்தில் ரூபா 5,283,600 கிரயத்தல் மூதூர் ஆதார வைத்தியசாலையில் எரியூட்டியொன்று (Incinerator) நிறுவப்பட்டிருந்தது. எனினும் எரியூட்டி நிறுவப்பட்ட பின்னர் ரூபா 2,429,890 மொத்தக் கிரயத்தில் அதிகமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இது 2020 மே வரையான நிறுவுதல் கிரயம் | இதனை விரைவாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2016 யூலை மாதத்தில் சுற்றாடல் அதிகாரசபையால் மூதூர் ஆதார வைத்தியசாலையில் எரியூட்டியை நிறுவுவதற்கான இடமொன்று இனங்காணப்பட்டிருந்தது. எரியூட்டியின் உயரம் 23 அடியாக காணப்பட்டது. எனினும் மூதூர் ஆதார வைத்தியசாலையிலுள்ள விடுதிகளின் உயரம் 41 அடியாகக் காணப்பட்டது. |

| | | |
|---|---|---|
| தொடர்பாக இயந்திரத்தின் கிரயத்தில் 46 சதவீதத்தை விடக் கூடுதலாக ஏற்பட்டிருந்தது. | | ஆகையால் எரியூட்டியிலிருந்து வெளிவருகின்ற புகை சுற்றாடலை பாதித்திருந்தது. |

## 5.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது 36 வினைத்திறமை காண் தடைப் (ஈபீ) பரீட்சைகளை ஆணைக்குழு நடாத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 10 ஈபீ பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட 09 வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளை மாகாண பொது சேவை ஆணைக்குழு நடாத்தியிருக்காத போதிலும் 16 மேலதிக பரீட்சைகளான 08 திட்டமிடப்படாத வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகள் மற்றும் 07 ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தன. |

## 5.4 பதவியணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 இன் 01 ஆம் இலக்க நிதிச் சட்டமூலத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண இறைவரி ஆணையாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 திசெம்பர் 18 இலிருந்து | மாகாண இறைவரி ஆணையாளரை நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நடவடிக்கை | மாகாண இறைவரித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் பொருத்தமான |

| | | |
|---|---|---|
| மாகாண இறைவரி ஆணையாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் கிழக்கு மாகாணத்தின் மாகாண இறைவரித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் இப்பதவியை நிரப்புவதற்கு மாகாண சபை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | மாகாண இறைவரி ஆணையாளரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5.5 கல்வித் துறை தொடர்பான அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கல்வி அமைச்சின் 1998 யூலை 06 ஆம் திகதிய 1998/23 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமை பெற்ற அதிபர்கள் நியமனம் செய்யப்படும் வரை செயலாற்றும் அதிபர்கள் நியமனம் செய்யப்பட முடியும். எனினும் இலங்கை ஆசிரியர் சேவையின் (எஸ்எல்ரீஎஸ்) 27 ஆசிரியர்கள் மேற்படி சுற்றறிக்கைக்கு முரணாக கிண்ணியா கல்வி வலயத்தில் செயலாற்றும் அதிபர்களாக வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | 1998/23 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இலங்கை அதிபர் | வெற்றிடப் பாடசாலைகளுக்கு அவ் அதிபர்களை | கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் முறையான |

| | | | |
|---|---|---|---|
| | சேவையின் (எஸ்எல்பிஎஸ்) 08 உத்தியோகத்தர்கள் எந்தவொரு பாடசாலை பொறுப்புமில்லாமல் பாடசாலைகளுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். எனினும் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள அதிபர்களுக்கான 27 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான நடவடிக்கைககள் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக வலயத்திலுள்ள கல்வி நியமங்கள் நாட்டிலுள்ள கல்வி வலயங்களுக்கான தரப்படுத்தலின் பிரகாரம் மிகவும் குறைந்த நியமங்கள் வரை குறைவடைந்திருந்தன. | இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. |
| (இ) | கல்வி அமைச்சின் 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை பூர்த்தி செய்திருந்த அனைத்து ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். எனினும் கிண்ணியா கல்வி வலயத்தில் செயலாற்றும் அதிபர்களாக தற்காலிகமாக பணிபுரியும் 27 ஆசிரியர்கள் 08 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலவீச்சில் வருடாந்த இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் ஆசிரியர்கள் தற்காலிக அடிப்படையில் பாடசாலைகளிற்கு இணைப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் கிண்ணியா கல்வி வலயத்தின் 21 ஆசிரியர்கள் 02 ஆண்டுகள் தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தேசிய பாடசாலைகளிலிருந்து மாகாண பாடசாலைகளிற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் சம்பளங்கள் தேசிய பாடசாலைகளின் சம்பளப்பட்டியல்களிலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் தற்காலிக இணைப்புக்களை இரத்துச்செய்வதற்கு அல்லது பொருத்தமான பாடசாலைகளில் அவர்களை அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் ஆசிரியர்கள் ஆரம்பத்தர பாடநெறி ஆசிரியர்களாக உள்ளனர். அவர்களது நிரரந்தரப் பாடசாலைகள் 1000 பாடசாலைகள் செயற்திட்டத்தின் கீழ் வருகின்றன. ஆகையால் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட 1000 பாடசாலைகள் செயற்திட்டத்திற்கு மீண்டும் இவ் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய முடியாதுள்ளது. இதற்கு மேலதிகமாக கல்முனை வலயத்தில் பொருத்தமான பாடசாலைகள் காணப்படவில்லை. |
| (உ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ஆரம்ப மட்டம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடநெறிகள் போன்ற பிரதான பாடநெறிகளுக்கு 472 ஆசிரியர்கள் மேலதிகமாக அறிக்கையிட்டிருந்தனர். எனினும் கல்முனை கல்வி வலயம் அறிக்கையிட்டிருந்த 272 பற்றாக்குறை காணப்படுகின்ற பாடசாலைகளிற்கிடையே பதவியணியினரை | ஆசிரியர் பதவியணியை நிரந்தரமாக சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மாகாண கல்வி திணைக்களம் என்பன வலயங்களிற்கிடையே பதவியணியினரை சமப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக சில படிமுறைகளை எடுத்துவருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்படுத்துவதற்கு அல்லது அவர்களை வெளி வலயங்களிற்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | கல்வி அமைச்சின் 2007 திசெம்பர் மாத 20/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 08 ஆண்டுகளுக்கு மேலான காலத்தை பூர்த்தி செய்திருந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் கல்முனை கல்வி வலயத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் 311 ஆசிரியர்கள் எந்தவொரு இடமாற்றமும் இல்லாமல் ஒரே பாடசாலையில் 08 ஆண்டுகள் தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலவீச்சில் பாடசாலை ஒன்றில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பாக முறையான இடமாற்றக் கொள்கை வலயத்தால் பின்பற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | 20/2007 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மாகாண கல்வி திணைக்களம் என்பன வலயங்களிற்கிடையே பதவியணியினரை சமப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக சில படிமுறைகளை எடுத்துவருகின்றன. |